RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2426

OPEN ACCESS

# நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் பெண்கள் உடன்கட்டை ஏறுதல்

அ. வினிதா [அ, *], ஆர். அசோகன் [அ]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, அண்ணாமலை பல்கலைக்கழகம், விழுப்புரம் - 605602, தமிழ்நாடு, இந்தியா.

# Sati in Folk Songs

A. Vinitha [a, *], R. Ashokan [a]

[a] Department of Tamil, Arignar Anna Government Arts College, Annamalai University, Villupuram-605602, Tamil Nadu, India

* Corresponding Author: vinithaangappan@gmail.com

Received: 09-01-2024
Revised: 18-03-2024
Accepted: 22-03-2024
Published: 05-04-2024

Check for updates

**ABSTRACT**

Birth and death are equal for all beings. Although it is natural, death mostly takes place artificially. Human beings play an important role. In the human race, where men and women are together, the cause for men's death is always solved but the cause for women's death is still unresolved. This article is intended to explain the cause of the death of a woman due to basic reasons like chastity, about how men treated women after that, what kind of value did women were given in the society and what is the reason behind the historical practice Sati.

**Keywords:** Women, Sati, Chastity, Folk Songs

## முன்னுரை

பிறப்பு, இறப்பு என்பது உலகிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் இயற்கையாக அமைகின்றது என்றாலும், இறப்பு என்பது பெரும்பாலும் செயற்கையாகவே நடைபெறுவது பெரும் சோகத்தை உண்டாக்குகின்றது. இதில் மனிதன் முக்கிய இடத்தைப் பெறுகின்றான்.

ஆணும், பெண்ணும் இணைந்துள்ள மனித இனத்தில் ஆணினது இறப்பைப் பற்றிய தேடல் என்பது அதிகளவில் காணப்படுகின்றது. பெண்ணின் இறப்பிற்கான காரணம் மேலோட்டமானதாக காணப்படுகின்றது. பெண்களின் இறப்பிற்கு அடிப்படையான காரணமாகக் கற்பு திகழ்ந்தமையால், அவை கதைப்பாடல்களில் எந்நிலையில் பெண்களை, ஆண்கள் எக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் நடத்தினர் என்பதையும், அதற்கு அக்காலச் சமூகத்தில் பெண்களுக்கு எந்த விதமான மதிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றியும், அவர்கள் உடன்கட்டை ஏறுவதற்குக் காரணமாக அமைந்தவர்கள் யார் என்பதைப் பற்றியும் அவை கதைப்பாடல்களில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்த முயற்சிக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## கதைப்பாடல்

பெண்கள் உடன்கட்டை ஏறுவதற்க காரணம் என்ன என்பதை காண்பதற்கு முன்பாக கதைப்பாடல் பற்றிக் காண்போம். ஒரு செய்தியினைத் தொடக்கம் முதல் இறுதிவரை கோர்வையாகப் பேசக்கூடியவையாக அமைவது கதைகளும், கதைப்பாடல்களும். கதைப்பாடல்

என்பது கதையைப் பாடல் வடிவில் பாடுவது என்றே கூறலாம். கதைகள் உரைநடை வடிவில் அமைந்தது. கதைப்பாடல்கள் தனிநபரின் ஒட்டுமொத்த வரலாற்றையும் பாடல் வடிவில் பேசக்கூடியவையாகும்.

Ballad என்ற ஆங்கிலச் சொல்லே தமிழில் கதைப்பாடல் என்ற சொல்லிற்குப் பொருத்தமான ஒன்றாகும். நாட்டுப்புறவியல் இலக்கியத்தில் உள்ள அனைத்துக் கூறுகளும் கதைப்பாடல்களில் பொருந்தி வரும் என்பர். கதைப்பாடல் ஒருவரின் வீரம். ஆட்சி, போர். கொலை, விவேகம் போன்றவை எடுத்துக் கூறுவதாக நின்றுவிடாமல், பெண்கள் சமூகத்தில் எக்கண்ணோட்டத்தில் பார்க்கப்பட்டனர் என்பதை ஆண்கள் அவர்களுக்கு எந்நிலைகளில் எல்லாம் வைத்திருந்தனர் என்பதையும் பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களின் நிலைப்பாடுகளை எடுத்துக் கூறும் வகையிலும் அமைந்துள்ளது.

## கதைப்பாடல் வகைகள்

கதைப்பாடல்கள் உள்ளடக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, சமூகக் கதைப்பாடல், வரலாற்றுக் கதைப்பாடல், புராணக் கதைப்பாடல் எனப் பிரித்துள்ளனர்.

## உடன்கட்டை ஏறுதல்

சங்ககாலம் முதல் இக்காலம் வரை உடன்கட்டை ஏறுதல் என்ற சொல்லாடல் வழக்கில் வழங்கி வருகின்றது எனலாம். காலத்திற்கேற்ப அச்சொற்கள் மாறிக்கொண்டே வந்துள்ளன.

எரிபுகுதல், தீப்பாய்தல், உடன்கட்டை ஏறுதல், சதி போன்ற சொற்கள் பயன்படுத்தி உள்ளனர். தமிழில் உடன்கட்டை என்ற சொல்லிற்கு முன்பாக "நல்லோள்" என்ற சொல்லை பயன்படுத்தி உள்னனர். அதுவும் அது கணவனுடன் எரிபுகும் பெண்ணைக் குறிக்கும் சொல்லாகத் தொல்காப்பியர் பயன்படுத்தி உள்ளார்.

'நல்லோள் கணவனொடு நனியழல்புகீஇச்

சொல்லிடை இட்ட பாலை நிலையும்' [1] (தொல்.புறம். சூத்.19)

என்ற நூற்பா அழகாகச் சுட்டிக் காட்டுகிறது.

அழல்புகுதல் என்ற சொல்லிற்கு பதிலாக உடன்கட்டை ஏறுதல் என்ற சொல்லைப் பழங்காலத்தில் பயன்படுத்தியுள்ளனர் எனலாம். உடன்கட்டை ஏறுதல் என்ற சொல் வரக் காரணம், தீப்பாய்தல் என்ற சொல் பொதுக் குறியீடாக அமைந்ததால், பெண் கணவனுடன் தீப்புகுந்து உயிர்விடும் செயலைப் பிரித்துக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சொல்தான் உடன்கட்டை ஏறுதல் ஆகும்.

## கதைப்பாடல்களில் தற்கொலை செய்யும் முறைகள்

1. உடன்கட்டை ஏறுதல்
2. நாவில் சேலை சுற்றி உயிர் விடுதல்
3. தீயில் விழுந்து உயிர் விடுதல்
4. கிணற்றில் விழுந்து உயிர் விடுதல்

என வகைப்படுத்தலாம். அவற்றில் உடன்கட்டை ஏறுதல் மூலம் உயிர்விட்ட பெண்களின் கதைகளைக் கதைப்பாடல் மூலம் காணலாம்.

## கதைப்பாடலில் உடன்கட்டை ஏறுதல்

ஒவ்வொரு கதைப்பாடல்களும், ஒவ்வொரு கதைப்பாடல்களில் இருந்து வேறுபடுகிறது. அவ்வாறு வேறுபடும் கதைப்பாடல் ஒவ்வொரு செய்திகளை முன்வைத்துவிட்டு செல்கின்ற நிலைகளைக் காணலாம்.

## தேசிங்குராசன் கதைப்பாடல்

தேசிங்குராசன், ராணியம்மாள் இருவருக்கும் திருமணம் முடிந்த சில காலங்களில் இருவரையும் பிரித்து வைத்துவிடுகின்றனர். அவ்வேளையில் அதிகார ஆட்சியின்கீழ் இருந்த செஞ்சிமாநகரத்தைத், திறை பணம் கட்டாத காரணத்தால், ஆற்காடு நவாபு என்பவன் செஞ்சி கோட்டை மேல் போர் எடுக்க முடிவு செய்கின்றான்.

அதற்குத் தன்னுடைய 85000 குதிரைப் படைகளை ஆயத்தம் செய்தான் ஆற்காடு நவாபு. அவற்றை எதிர்த்து தேசிங்குராசன் வெறும் 350 குதிரைப்படைகளை எடுத்துப் போருக்குச் சென்ற தேசிங்கு.

நவாபு படைவீரர்களை வெட்டி வீழ்த்தினான். அந்தப் போரில் தன் நண்பன் மகவத்கான், பராசாரி குதிரை, நீலவேணி குதிரை, தன் படைவீரர்கள் அனைவரையும் இழந்து தனியாளாக தன்னுடன் போர் செய்ய நவாபு படையினர் இல்லை என்பதால், தான் மட்டும் செஞ்சிக்கோட்டைக்குச் செல்ல மனமில்லாத தேசிங்கு தன்னுடைய கத்தியைக் கழற்றி ஆகாயத்தில் வீசி தன் மார்பை விரித்துக் காட்டி இறந்து விடுகிறான். அதையறிந்த ராணியம்மாள் ஆற்காடு நவாபு மேல் கோபம் கொள்கின்றாள். அதன்பின்பு தேசிங்குராசன், இறப்பிற்கு ஆற்காடு நவாபு காரணம் இல்ல என்பதை அறிந்த ராணியம்மாள்.

நவாபிடம் தேசிங்குராசனுடன் தானும் உயிர்நீங்க வேண்டும் என்று கேட்கிறாள். மறுத்த நவாபு பின்பு அனுமதி கொடுக்கின்றான். அதன்பின்பு ராணியம்மாள் தேசிங்குராசனுடன் தீயில் குதித்து (உடன்கட்டை ஏறி) உயிர்விடுகிறாள்.

‘கண்கள் குளிர ராஜாவைப் பார்த்தாள்

ராணி அம்மாளும்!

ராஜாவுடனே தீயில் குதித்தாள்

ராணி அம்மாளும்!’ (தேசிங்குராஜனும் ராஜ தேசிங்க.பக்.191, வரி. 270)

என்ற வரி காணப்படுகிறது.

ஆட்சி மோகத்தில் இருந்த தேசிங்குராசன் தன்னுடைய மனைவியே அதிகார வர்க்கத்தின் கீழ் வைத்திருந்தான் என்பதை அறியலாம். அச்சமூகத்தின் சூழல்களுக்கேற்பதான் ராணியம்மாளும் வாழ்ந்துள்ளாள் என்பதை அவளின் இறப்பு உறுதி செய்கிறது.

## மதுரைவீரன் கதைப்பாடல்

மதுரைவீரனை ஆரத்தி எடுத்து வரவேற்ற பெண்தான் வெள்ளையம்மாள். அவள் மேல் காதல் கொண்ட மதுரைவீரன் அவளை இரவில் கடத்தும்போது பிடிப்படுகின்றான். திருமலை நாயக்கர் அதற்காக கையையும், கால்களையும் வெட்டும்படியாக தண்டனைக் கொடுக்கின்றார். அத்தண்டனையில் கைகால்களை இழந்து உயிர் விடுகிறான். இதையறிந்த மனைவி பொம்மியும். காதல் மங்கை வெள்ளையம்மாளும் உடன்கட்டை ஏறுகின்றனர்.

‘மன்னவனே உம்மைவிட்டு

மண்மேல் இருப்பதில்லை

கூட வருவேன் காண்

வெணை கொண் ராசவே' (பெண்ணிய நோக்கில் கதைப்பாடல், ப.95)

என்ற பாடல் மூலம் மனைவியான பொம்மி உடன் கட்டை ஏறினால் என்ற செய்தியோடு, தன்னைத் தொட்டுத் தூக்கினான் என்ற காரணத்தால் வெள்ளையம்மாளும் உடன்கட்டை ஏறினால் என்றால் என்ற செய்தியும் உடன் தெரிகிறது. கணவனே பிரிந்து இருக்கமுடியாது என்ற காரணத்தாலும், ஆண்களின் அதிகார பிடியில் சமூகம் இருந்ததுள்ளதால்தான் இருவரும் உடன்கட்டை ஏறியுள்ளனர் என்பதை அறியலாம்.

## முத்துப்பட்டன் கதைப்பாடல்

முத்துப்பட்டன் என்பவன் பொம்மக்கா, திம்மக்கா என இருவரையும் மணம் புரிகின்றான். சக்கிலியனான வாலப்பகடையின் காவல் இடத்தில் பசுக்கூட்டங்களை வன்னியர் கொள்ளையடிக்கின்றனரெனக் கேள்விப்பட்ட முத்துப்பட்டன் அவர்களோடு போரிட்டு, தானும் கொலையுண்டு இறக்கின்றான்.

இதையறிந்த பொம்மக்கா, திம்மக்கா சிங்கம்பட்டி ஜமீன்தாரிடம் உடன்கட்டை ஏற அனுமதி கேட்டபோது மறுத்து தன்னுடன் அவர்களை இருக்கும்படியாக கூறுகின்றான். அதை மறுத்த பொம்மக்கா. திம்மக்கா, ஜமீன்தாரின் சம்மதத்தின் பெயரில் முத்துப்பட்டன் உடலை வைத்து எறித்து அத்தீயில் இருவரும் அதில் விழுந்து உடன்கட்டை ஏறினர் இதனை,

'அக்காளும் தங்கையும் பட்டனையதிலெ கிடத்தி

தந்து கருமாதி தன்னையும் முடித்து மாலை கழ

சந்திரன் சூரியான் சாகிகள் வைத்து தானுமே

கட்டையிலேறினர் பெண்கள்' (பெண்ணிய நோக்கில் கதைப்பாடல், ப.96)

என்ற கதைப்பாடல் வரிகளால் அறியலாம்.

அதிகாரம் மற்றும் ஆதிகத்தின் பிடியில் இருந்த ஜமீன்தார் அவள் கணவன் இறந்த பின்பு தன்னுடன் இருக்க வெண்டும் என்ற ஆணாதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளான். அதற்கான அதிகாரத்தைச் சமூகமும் கொடுத்துள்ளது என்பதை இதன்மூலம் அறியலாம்.

## சின்னத்தம்பி கதைப்பாடல்

கணவனுக்கு உடன்கட்டை ஏறிய நிலை மாறி தன் மகனுக்காகவும், நிச்சயிக்கப்பெற்ற ஒருவனுக்காகவும் உடன்கட்டை ஏறிய நிலை காணப்படுகிறது. சின்னத்தம்பி போர்க் களத்தில் இறந்து கிடந்த நிலையே முதலில் கண்ட அவனின் தாய் உயிர் விடுகின்றாள். பிறகு நிச்சயிக்கப்பெற்ற கோணச்சியும்,

'மாமன் மகன் சின்னத்தம்பி என் மணவாளன்'

என்று சொல்லிக் கொண்டு உயிர் துறக்கின்றாள். இதனை,

'உயிர்வைத்து நானிருந்து இன்னோருடன்

வாழ்ந்தாக்கால்

தேசத்திலுள்ளவர்கள் செப்புவார் இப்பெருமை

ஈஸ்பரரே தஞ்சமென்று இறந்தானே கோணச்சியும்' (பெண்ணிய நோக்கில் கதைப்பாடல். ப.104)

என்று கதைப்பாடல் கூறுகிறது.

"பரிசம் போட்டாலே பாதி பெண்டாட்டி" என்ற வழக்காறு காணப்படுகிறது. ஆணுக்காக நிச்சயிக்கப்பட்ட பெண் அவனைத் தவிர வேறொருவனுக்குச் சொந்தமல்ல என்பதைக் காட்டுகிறது. திருமணத்திற்கு முன்பு நிச்சயிக்கப்பட்டவன் இறந்துவிட்டான் அவனுடன் சேர்ந்து இறந்துவிடுவதே உயர்ந்த கற்புநெறியாக அக்காலச் சமூகத்தில் நிலவியுள்ளது என்பதை அறியலாம். பெண் என்பவள் பிறப்பதில்லை அவள் இந்தச் சமூகத்தில் உருவாக்கப்படுகின்றாள் என்று கூறும் - சீமாண்டி பூவாலின் கருத்து உண்மை உடையதாக காணப்படுகிறது.

## சின்ன அண்ணன். சின்னத்தம்பி கதைப்பாடல்

பெண் என்பவள் கணவன், கணவாகப் வரப் போகின்றவன். கணவாக ஏற்றக் கொண்டவன் என்ற நிலையில் உடன்கட்டை ஏறிய நிலையில் இரந்து தன் கொழுந்தனுக்காக உடன்கட்டை ஏறியிருக்கின்றாள் என்பதை அறியலாம்.

இக்கதைப்பாடல் அண்ணி கொழுந்தனுக்கு இடையேயான உறவையும், அவனுக்காக அவள் உடன்கட்டையேறுவதையும் காட்டுகின்றது. தன் தம்பிக்கும், தன் மனைவிக்கும் இடையே உள்ள உறவு அறிந்த பெரியண்ண பெரியதம்பி, சின்னண்ணன் சின்னத்தம்பியே மான் வேட்டையின் போது அம்பெய்தி கொண்று விடுகின்றான். இந்த செய்தியை அறிந்த அண்ணி தம்பி இறந்து கிடக்கும் கொழுந்தனின் உடலைக் கண்டு,

'கண்ணுக்குக் கண்ணான கொளுத்தா

எங்கூட நீ கூடுனதுக்கு

இந்த வனத்திலே

எறும்பு தின்ன ஒனக்கக் காலமா என்று

கட்டிச் சேர்ந்துத புடிச்சி அழுதாளாம்'

'உங்கள் நான் காலி பண்ணிப் போயி

உலகத்தில் நான் வாள மாட்டான்

உங்களோட நான் உடன்கட்டை

ஏறுவன் என்று சொன்னாளாம்' (பெண்ணிய நோக்கில் கதைப்பாடல். ப.101)

என்று புலம்பி கொழுந்தன் உடலோடு தானும் விழுந்து உடன்கட்டை ஏறுகின்றாள்.

இக்கதைப்பாடல் மூலம் பெண் எந்தச் சூழ்நிலையிலும் ஆணுக்காக வாழ்வதும் அவனுக்காக இறப்பதுமாக அவளது வாழ்க்கை முடிவு பெறுகின்றது.

பெண்கள் கணவனே நம்பி இருக்க வேண்டும் என்பதையும், கடைசி வரைக்கும் ஆண்களுக்காக உயிர்க் கொடுத்துக் காக்கக்கூடிய தியாகியாக பெண் என்பவள் இருந்திருக்கிறாள் என்பதை அறியலாம்.

## முடிவுரை

நாட்டுப்புறக் கதைகளில் மட்டுமில்லாமல் உண்மை நிலைகளிலும், பெரும்பாலான இடங்களில் கணவனின் பிடியில்தான் பெண் தன்னுடைய வாழ்வை வாழ்ந்து வருகின்றனர் எனலாம். கல்விநிலையிலும், செல்வம் நிலையிலும் பெண் மதிப்பு உடையவளாக இருந்தாலும் ஆணுக்குப் பின்புதான் பெண் என்ற அதிகார நிலையானது பல குடும்பம் மற்றும் சமூகத்தில் காணப்படுகிறது என்றே கூறலாம். அவை நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் எந்நிலைகளில் காணப்படுகிறது என்பதை, ஆண் மற்றும் சமூகப் பிடியில் இருந்த பெண் என்னென்ன சூழ்நிலைகளில் அவள் உடன்கட்டை ஏறினாள் என்பதை இதன்மூலம் அறியலாம்.

## References

கலைச்செல்வி, அ. (2006) பெண்ணிய நோக்கில் கதைப்பாடல்கள், ரேவதி ஆப்செட் அச்சகம், சென்னை

கேசவன், கோ. (1987) நாட்டுப்புறவியல் கட்டுரைகள், புதுமைப் பதிப்பகம், திருச்சி

சண்முகசுந்தரம், சு. (2022) தேசிங்கு ராஜனும் ராஜா தேசிங்கும், மணி ஆப்செட் அச்சாக்கம், சென்னை.

புகழேந்தி புலவர், தேசிங்குராஜன் கதை, B.இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ், சென்னை.

பெருமாள், அ.நா. (1987) தமிழில் கதைப்பாடல், ஜெயஸ்ரீ பிரிண்டர்ஸ், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License